***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.362/2020 – P.W.1 (LW3)***

| | |
|---|---|
| *Name* | பாபு (Injured) |
| *Father/Husband's Name* | மாரியப்பன் |
| *Village* | அன்னுக்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *27* |

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 18.08.2022.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்சமயம் விபத்து காரணத்தினால் பணிக்கு எதுவும் செல்ல இயலாத நிலையில் உள்ளேன். எனக்கு எதிரி கலைவாணன் மகன் செந்தமிழ்செல்வனை தெரியும். இவ்வழக்கின் புகாரினை சக்திவேல் என்பவர் கொடுத்தார். 29.09.2019ம் தேதியன்று காலை 08.00 மணிபோல தஞ்சாவூருக்கு எதிரி செந்தமிழ்செல்வனின் பெரியம்மா வீட்டிற்கு வேலைக்கு போனோம். செந்தமிழ்செல்வன் சைட் ஒர்க் பார்க்கும் இஞ்சினியர். எதிரிக்கு சொந்தமான மகேந்திரா TUV 300ல் வண்டி சரியாக நினைவில் இல்லை. அதில் நானும் சிவா அண்ணா, சக்திவேல், கொத்தனார் சேகர் மற்றும் சித்தாட்கள் அபிஷேக் பச்சன், ஆகாஷ் ஆகியோர்கள் சென்றோம். எதிரி செந்தமிழ்செல்வன் தான் வண்டியை ஓட்டினார்.

2. வேலை முடிந்து இரவு 08.30 மணிபோல அதே வண்டியில் எதிரி செந்தமிழ்செல்வன் ஓட்ட நாங்கள் அனைவரும் திரும்பி ஊருக்கு வந்தோம். லெட்சுமாங்குடி, பனங்காட்டான்குடி இராவுத்தர் காலேஜ் எதிர்ப்புறத்தில் ஒரு சமாதி இருந்தது. அந்த சமாதி வழியாக வேகமாக எங்கள் வண்டியை எதிரி ஓட்டிவந்து சமாதிக்கு அருகில் உள்ள அரசமரத்தில் மோதிவிட்டார்.

3. மோதியவுடன் வண்டி அப்செட் ஆனது. எங்களுக்கு எல்லாம் அடிப்பட்டது. எனக்கு இடது பக்க கால் உடைந்துவிட்டது. இடது கையில் இரண்டு விரல்களும் உடைந்துவிட்டது. வாய், தாடை, கழுத்து பகுதியில் பலத்த பிராக்சரும், தலப்பகுதியில் பலத்த காயமும் ஏற்பட்டது. என்னுடன் பயணம் செய்த சிவா அண்ணா அங்கேயே அடிப்பட்டு இறந்துவிட்டார். அவருக்கு முதுகு பகுதயிலும், இடுப்பு பகுதியிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. சக்திவேலுக்கு முதுகு தண்டுவடத்தில் அடிப்பட்டு இடுப்புக்கு கீழே எதுவும் செயல்படாத நிலையில் இன்றுவரை உள்ளார். ஆகாஷ் மற்றவர்களெல்லாம் வண்டியை விட்டு

கீழே விழுந்துவிட்டார்கள். என்னால் அவர்களை கவனிக்க முடியவில்லை. ரொம்ப நேரம் நாங்கள் அனைவரும் காயம்பட்ட நிலையில் அங்கேயே கிடந்தோம். யாரும் பார்க்கவில்லை. பிறகு ஊர் மக்கள் வந்து ஆம்புலன்ஸ் மூலமாக திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். போலிசார் என்னையும் விசாரித்தார்கள். எனக்கு இந்த விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் அறுவை சிகிச்சை மேற்கொண்டு பிளேட்டும் பொருத்தப்பட்டுள்ளது. இந்த விபத்திற்கு எதிரி இஞ்சினியர் செந்தமிழ்செல்வன் காரை வேகமாக ஓட்டியதுதான் காரணம்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**